**S.C.No.56/2020**

**நாள். 4.10.2023.**

**அ.சா.12 திரு.வினாயகமூர்த்தி, காவல் ஆய்வாளர்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**அ.சா.1 தான் இவ்வழக்கில் புகார் கொடுத்தவர் என்றால் சரி தான். அ.சா.1புகார் கொடுக்க வரும்போது காயத்துடன் இருந்தார் அவருக்கு மருத்துவ நமூனா மூலம் மருத்துவமனைக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை இவ்வழக்கில் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். அ.சா.ஆ.4 விபத்து பதிவேட்டில் வடமாதிமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தையலிட்ட காயம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரி தான்.**

**காயங்களுடன் வந்த நபரை மருத்துவ நமூனா மூலம் மருத்துவமனைக்கு அனுப்பியிருக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு அனுப்பாமல் போலிசாருடன் சிகிச்சை பெற அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1னிடம் மருத்துவரிடம் நான் சொல்லிக் கொடுத்தவாறு சொல்ல சொல்லி அதன் அடிப்படையில் தான் விபத்து பதிவேட்டில் விவரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் 15வது காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் என்னுடைய ஆலோசனையின்பேரில் பஞ்சாயத்தார்கள் சொன்னதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

**புகாரில் சம்பவ இடத்தில் விளக்கு இருந்தது சம்பந்தமாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரி தான். ஆனால் நிலவு வெளிச்சம் அப்போது இருந்தது. நான் விசாரணை செய்த சாட்சிகள் யாரும் விளக்கு வெளிச்சம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரி தான். என்னுடைய**

விசாரணையில் நிலவு வெளிச்சம் இருந்தது பற்றி சொன்னதால் அந்த கேள்வியே இவ்வழக்கில் எழவில்லை. மேற்சொன்ன விவரத்தை வாக்குமூலத்தில் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை. அன்றையதினம் அந்த பகுதியில் இருந்த பருவ நிலை குறித்த அறிக்கை எதுவும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். வழக்கிற்காக நிலவு வெளிச்சம் இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய விசாரணையில் இறந்துபோன நபரும் ஒரு அய்யப்பன் என்பவரும் ரயில்வே பொருட்களை போட்டு வைக்கும் குடோனுக்கு காவலாளிகளாக இருந்தனர் என்பது தெரிய வந்தது என்றால் சரி தான். அய்யப்பன் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரி தான். அந்த நேரத்தில் அவர் அந்த இடத்தில் இல்லாததால் விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கு விசாரணைக்காக அந்த பகுதிக்கு எத்தனை முறை சென்றேன் என்றால் 2,3 முறை சென்றேன். ரயில்வே தரைபாலம் கட்டுவதற்கான பணி நடந்துக்கொண்டு இருந்தது என்றால் அன்றைய தேதியில் நடக்கவில்லை. அதற்கு முன்பும் பின்பும் நடந்துள்ளது.

ரயில்வே தரை பாலம் கட்டும் பணிக்காக தொழிலாளர்களை வரவழைத்து இறந்தவரின் நிலத்திற்கு மேற்கு பக்கமாக உள்ள ரயில்வே டிராக்கை ஒட்டி ஒரு ஷெட் அமைத்து தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்றால் சரி தான். 4,5 பேர் இருப்பார்கள். ஆனால் அவர்கள் அந்த சம்பவத்தை பார்க்கவில்லை. அந்த 4,5 பேர் யார் என விசாரணை செய்தேனா என்றால் விசாரித்தேன். அவர்கள் பெயர்களை குறிக்கவில்லை. வடமாநிலத்தை

சேர்ந்தவர்கள். அவர்களுக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்று தெரிவித்ததால் பெயர்களை கூட குறிப்பிடவில்லை. மேற்கண்ட சங்கதிகள் சரியல்ல என்றால் சரியல்ல.

வடமாதிமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த நபர் யார் என விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் வடமாதிமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கே விசாரணை சம்பந்தமாக நான் செல்லவில்லை. இறந்த நபருக்கு பல்வேறு நபர்களுடன் தனிப்பட்ட பிரச்சனைகளும், சண்டைகளும் இருந்தது என்றால் சரியல்ல. ரயில்வே தரைபாலம் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டு இருந்ததால் நடந்துச் செல்ல வேறு ஒரு பாதை போடப்பட்டிருந்தது என்றால் சரி தான். அந்த வேறு ஒரு பாதை சம்பந்தமாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் எந்தவிதமான குறிப்பும் இல்லை என்றால் சரி தான்.

சம்பவ இடமான குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான். அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் வீட்டின் அருகில் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். வீட்டில் இருந்து எவ்வளவு தூரம் என குறிப்பிடவில்லை என்றால் சரி தான். படிவம் 95 மூலம் எந்தெந்த பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால், ரத்தம் தோய்ந்த மண், சாதாரண மண் சிறிதளவு எதிரி வாதியை தாக்க பயன்படுத்திய நாட்டு தேக்கு கொம்பு ரத்தம் தோய்ந்துள்ளது, உடைந்த மற்றும் கூர்மையான நாட்டு தேக்கு கொம்பில் கீழ்பாகத்தின் ஒரு பகுதி, ரத்தம் தோய்ந்து கறை படிந்துள்ளது, ரத்தம் படிந்த வெள்ளை கலர் கட்பனியன்,

ரத்தம் படியாத சிமெண்ட் கலர் அரைகால் சட்டை ஆகியவற்றை அனுப்பினேன்.

அ.சா.1,2 எதிரிக்கு காயம் ஏற்பட்ட விதம் பற்றி சொல்லியுள்ளார்கள் என்றால் சரி தான். வாதியின் தற்காப்பிற்காக எதிரியை தாக்கியதாக கூறியுள்ளார்கள். எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக இதே காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கை நான் தான் விசாரணை செய்தேன் என்றால் இல்லை. எதிர் வழக்கு தொடர்பான விவரம் என்னுடைய கவனத்திற்கு வந்தது என்றால் சரி தான். அந்த வழக்கின் விசாரணை அதிகாரி வேறு ஒரு நபர்.

அ.சா.1 புகாரிலும் என்னுடைய விசாரணையிலும் எதிரிக்கும் எங்களுக்கும் பொதுவான வரப்பு என சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். எங்கள் வயலை தாண்டி தான் எதிரி போகவேண்டும் என்று விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் விசாரணையில் மட்டும் சொல்லியுள்ளார். வழி சம்பந்தமாக எங்களுக்குள் அடிக்கடி சண்டை நடந்து பஞ்சாயத்து நடந்து அதில் லைன் போட பத்து பேர் கையொப்பம் போட்டு அனுமதி கிடைத்தது என்பது சம்பந்தமாக புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. ஆனால் சாட்சிகளை விசாரித்தபோது எதிரி இறந்தவரிடம் பிரச்சனை செய்யமாட்டேன் என்று எழுதிக்கொடுத்தது சம்பந்தமாக நகலை சாட்சிகள் விசாரணையின்போது பெற்றுள்ளேன்.

பஞ்சாயத்து சம்பந்தமாக இவ்வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். வழக்கிற்காக தற்போது பின்னால் கேட்டு

தெரிந்துக்கொண்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கையொப்பம் போட்டு கொடுத்த ஆவணம் கோப்பில் நகலாக உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போதும் கொடுக்க தயாராக உள்ளேன். (நகல் மட்டும் தான் விசாரணை அதிகாரியிடம் இருக்கும் என்பதால் அசல் எதிரியின் கைவசம் உள்ள ஆவணம் என்பதால் இரண்டாம் தரப்பு ஆவணமாக இருப்பதால் இந்நீதிமன்றத்தால் விசாரணை அதிகாரி கேட்ட அனுமதி வழங்கப்பட்டது). <u>சமரச ஒப்பந்தத்தின் நகல் அ.சா.ஆ.19</u>. (கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்கண்ட ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவித்தார். ஆனால் அசல் எதிரியிடம் இருப்பதால் மேற்கண்ட ஆட்சேபனை இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை).

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.